15.10..2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.107/2018</u>

அ.சா.22

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | | |
| த/பெ | குப்பன் | | |
| கிராமம் | கரடிப்பாக்கம் | தொழில் | பெட்ரோல் பங்க் - கில் வேலை |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 39 /2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 15.10.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்களை எப்போது போட்டேன் என்றால், நான் பெட்ரோல் பங்கில் வேலை செய்து கொண்டிருந்தபோது, போலீசார் என்னிடம் முகவரியை கேட்டார்கள். அதன்பிறகு

கையெழுத்து போடுப்பா என்று சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என் முன்னிலையில் எந்த நபரையும் கூப்பிட்டு வந்து, போலீசார் விசாரணை செய்யவில்லை. 2 ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 1 ம் கையெழுத்து என்னுடையதுதான். அது முறையே அ.சா.ஆ.13 மற்றும் அ.சா.ஆ.14 ஆகும்.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 08/10/2011-ம் தேதி காலை 11:00 மணிக்கு, விழுப்புரம் தாலுக்கா போலீசார் இந்த வழக்கின் எதிரிகள் சிவா என்கிற சிவகுமார், அசோக் என்கிற அசோக்குமார், ஆகியோர்களை கைது செய்து, விசாரிக்கையில் எதிரிகள் தாமாக முன்வந்து எந்தவித அச்சுறுத்தாலும், ஆசை வார்த்தை இன்றியும், தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்துக்கொண்டார்கள் என்றும், அப்போது நானும், முனுசாமி நாயுடு மகன் ராதாகிருஷ்ணன் என்பவரும், சாட்சியாக இருப்பதாக ஒப்புக்கொண்டதன் பேரில், காவல் ஆய்வாளர் எதிரிகள் சிவா என்கிற சிவகுமார், அசோக் என்கிற அசோக்குமார், ஆகியோரை விசாரித்து, எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அப்போது ஆஜர் எதிரிகள்சிவா என்கிற சிவகுமார், அசோக் என்கிற அசோக்குமார், எங்கள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தார்கள் என்றும், அப்போது எதிரிகள் தாங்கள் கண்டம்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றும், வக்கீல் ஆறுமுகத்திற்கும், அதே கிராமத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவருக்கும், முன்விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 2006-ஆம் வருடம் ஆறுமுகத்தை கொலை செய்ததாகவும், அந்த வழக்கு திண்டிவனம் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாகவும், மேற்படி ராதாகிருஷ்ணனுடன் சிவா என்கிற

சிவகுமார், அசோக் என்கிற அசோக்குமார் ஆகிய எதிரிகளுக்கு கிரிக்கெட் விளையாடும் போது பழக்கம் ஏற்பட்டதாகவும், அவருடன் சத்தியசீலன், அன்பரசு, ரகு, புகழேந்தி, பிரதாப், அசோக் குமார், நான், விநாயகமூர்த்தி, பலராமன் மகன் ராதாகிருஷ்ணன், ஆகியோர்கள் கிரிக்கெட் விளையாடுவோம் என்றும், அப்போது பழக்கம் ஏற்பட்டு கொலை வழக்கில் அடிக்கடி கோர்ட்டிற்கு சென்று வந்த விஸ்வநாதன் மகன் ராதாகிருஷ்ணன் என்பவருடன், பழக்கம் ஏற்பட்டதால் அதனால் அனைவரும் ஒன்றாக தண்ணி அடித்தோம் என்றும், ஆறுமுகம் அவரது அண்ணன் முருகன், ஆறுமுகம் கொலை வழக்கில் கண்ணுற்ற சாட்சி என்பதால், முருகன் என்பவருக்கு 28/08/2014 ம் தேதி ஆறுமுகம் கொலை வழக்கில் முருகன் சாட்சி சொல்ல, போலீசார் சம்மன் கொடுத்தார்கள் என்றும், முருகன் சாட்சி சொன்னால் ராதாகிருஷ்ணனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்து விடும் என்பதால், எல்லோரும் ஒன்று சேர்ந்து முருகனை கொலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்கள் என்றும், அப்போது ராதாகிருஷ்ணன், சிலம்பரசனிடம் கத்தியை கொடுத்து மறைத்து வைத்திருந்தார் என்றும், முருகன் வீட்டு அருகில் தெரு விளக்கை நிறுத்திவிட்டு அன்பரசன் முருகனின் தலையைப் பிடித்துக் கொண்டார் என்றும், சத்தியசீலனும், புகழேந்தியும், கால்களை பிடித்துக் கொண்டார்கள் என்றும், கோபாலகிருஷ்ணன் முருகனின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு, 2 கைகளையும் பிடித்துக் கொண்டு திமிர விடாமல் பிடித்துக் கொண்டார் என்றும், ரகு, ராதாகிருஷ்ணன் ஆகியோர் வெட்டியதாகவும், மற்றவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்றும், சிவா என்கிற சிவகுமார், அசோக் என்கிற அசோக்குமார், ஆகியோர் அவர்களாகவே போலீசார் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் போலீசார் பதிவு செய்தார்கள் என்றும், இதுகுறித்து போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறுவிசாரணை

இல்லை